


23.9.2024

தலைப்புச் செய்திகள்

- மனித சமுக நலத்திற்கு ஜனநாயக மாண்போடு நவீன தொழில்நுட்பமும் இணைவது அவசியம் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் குற்ற செயல்களில் ஈடுபடுவோர் நீதிமன்றங்களில் ஒப்படைக்கப்பட்ட பின்னரே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.
- இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்களுக்கு உரிய சட்ட உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மத்திய அரசிற்கு கடிதம் எழுதியுள்ளார்.
- தமிழ்நாட்டில் மருத்துவ துறையில் பல்வேறு முன் மாதிரி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.
- சீன செங்டுவில் நடைபெறும் ATP டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் யூக்கி பாம்ப்ரி, ஃபிரான்சின் அல்பனோ இணை – குரெசியா பிரேசில் இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர்

மனித சமுக நலத்திற்கு ஜனநாயக மாண்போடு நவீன தொழில்நுட்பமும் இணைவது அவசியம் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

நியூயார்க்கில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் முதன்மை நிர்வாக அதிகாரிகளுடன் இன்று கலந்துரையாடிய அவர், ஜனநாயக மதிப்பீடுகள் மற்றும் தொழில்நுட்ப பலன்கள் மக்களின் வாழ்வாதாரத்திற்கான உத்தரவை வழங்குவதாக சுட்டிக்காட்டினார்.

தொழில்நுட்பம் இல்லா ஜனநாயகம் நெருக்கடியை தோற்றுவிக்கும் என்று கூறிய அவர் இந்தியாவில் திறமைகளும், சந்தை வாய்ப்புகளும் ஜனநாயகமும், வளமாக உள்ளது என்றார்.

பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புகளுக்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசனை மேற்கொண்ட பிரதமர், இந்தியா குறித்த அந்நாட்டின் நிர்வாக அதிகாரிகளின் கருத்துக்களை கேட்டறிந்ததோடு, அவர்களின் நம்பிக்கை குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

புதிய கொள்கைகளை உருவாக்க இது வழிகோலும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

சமூக வலைதளத்தில் வட்ட மேஜை தொடர்பான தகவல்களை பகிர்ந்துள்ள பிரதமர் இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இத்துறையில் இந்தியா மேற்கொண்டுள்ள முன்னெடுப்புகளையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னதாக அமெரிக்க வாழ் இந்திய வம்சாவளியினருடன் பிரதமர் கலந்துரையாடினார்.

தமது 3 நாள் பயணத்தின் இறுதியாக பிரதமர் ஐ.நா. சபை சார்பிலான எதிர்கால உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் இந்த உச்சிமாநாடு, "சிறந்த எதிர்காலத்திற்கான பல்முனை தீர்வுகள்" என்ற கருப்பொருளுடன் நடைபெறுகிறது.

*************

எல்.முருகன்

தமிழ்நாட்டில் குற்ற செயல்களில் ஈடுபடுவோர் நீதிமன்றங்களில் ஒப்படைக்கப்பட்டே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எண்கவுண்டர் நடவடிக்கைகள் மூலம் சட்டத்தை காவல் துறையினர் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ள கூடாது என்றார்.

தமிழ்நாட்டில் மதுவிலக்கை நடைமுறைபடுத்துவதாக அறிவித்த திமுக அரசு அதனை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குறை கூறினார்.

முன்னதாக தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்களின் மறுவாழ்விற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாகவும் கூறினார்.

வாய்ஸ்

*************

ஆயுஷ்மான் பாரத்

பிரதமரின் ஜன் ஆரோக்கியா ஆயுஷ்மான் பாரத் காப்பீடு திட்டத்தின் 6ஆவது ஆண்டு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

2018ஆம் ஆண்டு ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் பிரதமர் தொடங்கிவைத்த இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ஏழை எளிய குடும்பங்களுக்கு, ஐந்து லட்சம் ரூபாய் சுகாதார காப்பீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

12 கோடியே 37 லட்சம் குடும்பங்களை சேர்ந்த 55 கோடி மக்கள் இந்த திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

கடந்த 6 ஆண்டுகளாக இத்திட்டத்தின் கீழ் பெருமளவிலான மக்கள் பயனடைந்துள்ளதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தமது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

ஆயுஷ்மான் பாரத் சுகாதார திட்ட பாதை, தேச ஆரோக்கியத்தையும், அதன் மக்களின் நலத்தையும், முன்னெடுத்து செல்லும் உன்னத திட்டமாக திகழ்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள குடிமக்கள் குறிப்பாக விளிம்பு நிலை மக்களுக்கு சுகாதார நலன்களை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டு மத்திய அரசு இந்த திட்டத்தை அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

*************

ஜம்மு காஷ்மீர் தேர்தல்

ஜம்மு காஷ்மீரில் 5 மாவட்டங்களின் 26 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை மறுநாள் நடைபெறும் இரண்டாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் இன்றுமாலை ஓய்கிறது.

இதனையடுத்து அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் இன்று இறுதிகட்ட பிரச்சாரத்தில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

பூஞ்ச் ஸ்ரீநகர் பகுதிகளில் காங்கிரஸ் கட்சியின் திரு.ராகுல்காந்தியும்,

ஸெய்னா கொட்டேயில் தேசிய மாநாட்டு கட்சி தலைவர் திரு..ஃ.பரூக் அப்துல்லாவும் இன்று தேர்தல் பேரணிகளில் பங்கேற்கின்றனர்.

3ஆவது கட்டமாக 40 தொகுதிகளுக்கான தேர்தல் வரும் ஒன்றாம் தேதி நடைபெறும்.

3 கட்டங்களாக பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 8ஆம் தேதி எண்ணப்படும்.

************

இலங்கை அதிபர்

இலங்கையின் 9ஆவது அதிபராக தேசிய மக்கள் கட்சியின் அனுர குமார திச நாயக்க இன்று பதவி ஏற்றார்.

கொழும்புவில் நடைபெற்ற பதவி ஏற்பு நிகழ்ச்சியில், அந்நாட்டின் தலைமை நீதிபதி ஜெயந்த ஜெயசூரியா அவருக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்துவைத்தார்.

************

முதலமைச்சர் கடிதம்

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்யப்படுவதை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மீனவர்களையும், அவர்தம் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்படும் தமிழக மீனவர்களுக்கு தேவையான சட்ட உதவிகள் வழங்கிட வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

கைது செய்யப்படும் மீனவர்களுக்கு விதிக்கப்படும் அதிக அளவு அபராத தொகையை தடுக்க உரிய நடவடிக்கைககள் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

*************

முதலமைச்சர் - தொழில்நுட்ப பூங்கா

தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் தலா 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மினி தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து முதலமைச்சர் இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

கூட்டுறவுத்துறை சார்பில் 15 கோடி ரூபாய் மதிப்பில் பல்துறை கட்டிடங்களையும் திறந்துவைத்த முதலமைச்சர் 36 கோடி ரூபாய் மதிப்பில் 58 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களையும் திறந்துவைத்தார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் 110 பேருக்கு பணிநியமன ஆணைகளையும் அவர் வழங்கினார்.

*************

மா.சுப்பிரமணியன்

தமிழ்நாட்டில் மருத்துவ துறையில் பல்வேறு முன் மாதிரி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை சிறப்பாக செயல்படுத்திய மருத்துவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை இன்று வழங்கி பேசிய அவர், இதன்காரணமாக மருத்துவ துறையில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக தமிழகம் திகழ்வதாக கூறினார்.

*************

கீதாஜீவன்

தூத்துக்குடியில் சாலையோரங்களில் 20 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மாநில சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் இன்று தொடங்கிவைத்தார்.

வரும் 3ஆம் தேதி தொடங்க உள்ள புத்தக திருவிழா, நெய்தல் கலைவிழா குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வில்லைகளை பேருந்துகளில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

*************

எடப்பாடி

முதலமைச்சரின் வெளிநாட்டு பயணங்கள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி கோரியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வெளிநாட்டு பயணத்தின் மூலம் போடப்பட்ட ஒப்பந்தங்கள் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட திட்டங்கள் குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்றும் கோரினார்.

*************

ராமதாஸ்

மீனவர்கள் நலனை காக்க மத்திய மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இந்த விவகாரத்தில் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் அழைத்து பேசி நிரந்தர தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

*************

நாமக்கல் கோ ஆப்டெக்ஸ்

நாமக்கல் கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 30 சதவிகித சிறப்பு தள்ளுபடி விற்பனையை ஆட்சித்தலைவர் டாக்டர் உமா இன்று தொடங்கிவைத்தார்.

இந்தாண்டு 92 லட்ச ரூபாய் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வாய்ஸ்

*************

போராட்டம் விலகல்

தமிழ்நாட்டில் தொடக்க கல்வி துறையை சேர்ந்த 12 ஆசிரியர் சங்கங்கள் மேற்கொள்ள இருந்த வேலை நிறுத்த போராட்டம் விலக்கி கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை தலைமை செயலகத்தில், மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் இந்த சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இந்நடவடிக்கை.

ஆசிரியர் கூட்டமைப்பினரின் கோரிக்கைகள் குறித்து அரசு பரிசீலிக்கும் என்று இக்கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டதை தொடர்ந்து இம்முடிவு எட்டப்பட்டுள்ளது.

*************

கலந்தாய்வு

தமிழ்நாட்டில் இளநிலை யோகா இயற்கை மருத்துவ படிப்புகளுக்கான கலந்தாய்வு இன்று தொடங்குகிறது.

சிறப்பு பிரிவினருக்கு இன்றும், பொதுப்பிரிவினருக்கு நாளையும், இக்கலந்தாய்வு நடைபெற உள்ளது.

வரும் 26, 27 தேதிகளில் நிர்வாக ஒதுக்கீட்டு கலந்தாய்வு நடைபெறுகிறது.

*************

சைகை மொழி தினம்

சர்வதேச சைகை மொழி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி சைகை மொழியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மதுரை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதா இன்று தொடங்கிவைத்தார்.

*************

இருவரி

நாகை மாவட்டத்தில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் சுருக்குமடி வலையை முற்றிலும் தடை செய்ய கோரி 25க்கும் மேற்பட்ட கிராம மக்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் மத்திய மாநில அரசு நல திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு வாகனத்தை ஆட்சித்தலைவர் திரு.தர்ப்பகராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

20 நாட்களுக்கு மாவட்டம் முழுவதும் மக்கள் கூடும் மையங்களிலும், கிராமப்புறங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்களுக்கான தொழில்முனைவோர் கருத்தரங்கு மற்றும் திறன்மேம்பாட்டு பயிற்சி கூட்டம் நாளை மறுநாள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் கூறியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் நெல் சம்பா பயிருக்கு அடுத்த மாதம் 15ஆம் தேதிக்குள்ளும், மக்காசோளம் பருத்தி பயிர்களுக்கு அடுத்த மாதம் 16ஆம் தேதிக்குள்ளும், காப்பீடு செய்துகொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய ஊட்டச்சத்து மாத விழாவையொட்டி, போ‘ன் அபியான் திட்டத்தின்கீழ், ஊட்டசத்து குறித்த கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

இக்கண்காட்சியின் மூலம் பொதுமக்களுக்கு ஊட்டசத்து தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக இதில் பங்கேற்ற அங்கன்வாடி பணியாளர் தெரிவிக்கையில்,

*************

கிரு‘ணா நதிநீர்

ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட கிரு‘ணா நதிநீர் தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை, தாமரைகுப்பம், ஜீரோ பாயிண்டிற்கு இன்று வந்தடைந்தது.

வினாடிக்கு ஆயிரத்து 300 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கும் நிலையில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இன்று காலை மலர்த்தூவி வரவேற்றனர்.

*************

கோவில்

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் திருகார்த்திகை தீப திருவிழாவை ஒட்டி பந்தகால் நடும் விழா இன்று நடைபெற்றது.

*************

டென்னிஸ்

சீன செங்டுவில் நடைபெறும் ATP டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, ஃபிரான்சின் அல்பனோ இணை – குரேசியாவின் Ivan, பிரேசிலின் Rafael இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

அதேபோல் ஹாங்ஷுவில் நடைபெறும் மற்றொரு ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், Prashanth இணை -

உருகுவேயின் Behar, அமெரிக்காவின் Galloway இணையை தற்போது எதிர்கொண்டுள்ளது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

*************